TAMIL NADU LEGISLATURE LIBRARY
17 NOV 1971
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை 1971, ஏப்ரல் 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நடைமுறைக் கேள்வி.

விரைவாக வினாக்களுக்கு விடைகள் அளிக்கவேண்டியதன் அவசியம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைய முதல் அலுவல் வினாக்கள்-விடைகள்.

DR. H. V. HANDE: I rise on a point of Order under Rule 83 (4). Will it not be possible for the Hon. Speaker to see that those questions, for which answers have already been received, questions which we have put in the last Assembly and answers thereon which would have been there (we have renewed those questions and there is only the process of Ministers giving answers–many Ministers have not changed and the same Ministry is continuing) are answered in the House? What is the difficulty in giving answers on the floor of the House? Even with regard to short notice questions, only short notice question 5 is coming now. Four short notice questions are pending and answers have not come. Answers could be collected expeditiously. I have myself given two short notice questions anl about 200 starred questions. We have only two more days. Afterwards the House is going to adjourn. Will the Hon. Speaker see to it that in these two days some questions including short notice questions are positively answered?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் இது பாயின்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கேள்வியில் இருக்கிற சிரத்தையைக் காட்டுவதற்கு இதை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தியிருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எழுதியிருந்த ஒரு கடிதத்திற்கு இங்கே விளக்கமாகப் பதில் அளித்திருக்கிறேன். எத்தனை கேள்விகள் வந்திருக்கின்றன என்பதைப்பற்றியும், அவைகள் இலாக்காக்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன, அவைகளுக்கு விரைவாகப் பதில் அனுப்புவதற்கான ஆணையை அமைச்சர்கள் பிறப்பிக்கவேண்டும் என்றெல்லாம் கூறினேன். கேள்விகள் வந்தால் அவை விரைவாக இலாக்காக்களுக்கு அனுப்பப்பட்டு, பதில் வந்தவுடன் இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்படும். ஆனால், அதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் உணர வேண்டும்.

முன்னால் கேட்கப்பட்ட கேள்விகள் என்றாலும், முன்னுலிருந்த சட்ட மன்றத்திற்கும், இந்தச் சட்ட மன்றத்திற்கும் கொஞ்சம்கூட சம்பந்தம் இல்லே. அதே உறுப்பினர்கள் மீண்டும் வந்திருக்கலாம். அதே அமைச்சர்கள் மீண்டும் வந்திருக்கலாமேதவிர, சட்டமன்ற நடவடிக்கைகள், கேள்விகள் ஆகியவை களெல்லாம் முற்றிலும் புதியவை. இது முற்றிலும் புதிய ஐந்தாவது சட்ட மன்றம்; புதிய மந்திரி சபை, அதே கேள்விகளே மாண்புமிகு உறுப்பினர்கள் புதியதாகக் கேட்டிருக்கலாம். கேள்விகளைப் புதுப்பிப்பது என்பதெல்லாம் இப்பொழுது எழவில்லே. ஆனால், அங்கத்தினர் அவர்கள் சொல்லுவதுபோல, பதில்கள் சரியாகத் தயாராகிவிட்டால், விரைவாக அனுப்புவார்கள், விரைவாக அனுப்பவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிலைமையில்தான் இங்கே இன்று ஒரு குறுகிய காலக் கேள்வி வந்திருக்கிறது. இன்றைக்கு வினக்கள்-விடைகள் நேரத்தில் ஒரு குறுகிய காலக் கேள்விக்கு விடை அளிக்கப்படும். வினவைக் கேட்டிருப்பவர் திருப்பூர் தொகுதி உறுப்பினர். அதுமாதிரி விடைகள் இந்த இரண்டு நாட்களுக்குள் வந்தால், இங்கே பதில் அளிக்கப்படும். இதிலே தாமதமோ அல்லது துரிதப்படுத்தாத தன்மை எதுவுமோ இல்லே என்று கூறி, முதல் அலுவலாக 'வினக்கள்-விடைகள்' இருப்பதால், திருப்பூர் தொகுதி உறுப்பினர் திரு. சு. துரைசாமி அவர்களே அவருடைய குறுகிய கால வினவைக் கேட்கும்படி அழைக்கிறேன்.

2. வினக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினக்கள்.

வெள்ளக்கோவில் தொகுதியில் தேர்தல் தகராறுகள்

*குறுகிய கால வின—எண் 1 திரு. சு. துரைசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதியில் சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தல் தகராறு காரணமாக திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டனரா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) 6--3--1971 அன்று பெருந்துறை காவல் துறை இன்ஸ்பெக்டர் தாசநாயக்கன்பட்டி கிராமத்திற்குச் சென்று தேர்தல் சம்பந்தமாகக் கொடுக்கப் பட்ட புகார் ஒன்றை, விசாரணை செய்துகொண்டிருந்த சமயம் வெள்ளக் கோவில் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் திரு. டி. ராமசாமி தன் நண்பர்கள் இருவர்களுடன் அவ்விடம் வந்து சேர்ந்தார். அதே சமயத்தில் வெள்ளக் கோவில் சட்ட மன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் திரு. அப்பன் என்கிற பழனிசாமி மற்றும் சிலருடன் கூட வந்தார். இரு தரப்பாருக்குமிடையே சிறிய கலவரம் மூண்டது. திரு. டி. ராமசாமி தன்னுடைய கைத்துப்பாக்கியை எடுத்துச் சுட்டார். கூடியிருந்தோர் திரு. ராமசாமியைத் தாக்கலானார்கள். மீண்டும் அதே துப்பாக்கியை எடுத்து, கூட்டத்தினரை நோக்கி இரண்டு முறை சுட்டார். கூட்டத்திலிருந்த ஒருவர் கழுத்தில் குண்டு பாய்ந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். திரு. டி. ராமசாமியும் அவரது